செய்தி வெளியீடு எண்: 530 நாள்: 05.07.2008

## பத்திரிக்கை குறிப்பு

## கைத்தறி பட்டு மற்றும் பருத்திப் புடவைகள் கண்காட்சி விற்பனை

வேளாண்மைக்கு அடுத்தப்படியாக அதிக வேலைவாய்ப்பு வழங்குவது நெசவுத் தொழிலாகும். இந்தியாவில் உள்ள 34.86 இலட்சம் கைத்தறிகளில், 4.29 இலட்சம் கைத்தறிகள் தமிழகத்தில் உள்ளன. அகில இந்திய அளவில் உள்ள நெசவாளர்களில், தமிழகத்திலுள்ள நெசவாளர்களின் பங்கு சுமார் 20 சதவிகிதமாகும்.

தமிழகத்திலுள்ள 6.08 இலட்சம் நெசவாளர்களில், 2.35 இலட்சம் நெசவாளர்கள் 1103 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் இணைந்து உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். எஞ்சிய 1.78 இலட்சம் நெசவாளர்கள் தனியார் அமைப்பில் உள்ளனர்.

தமிழகத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கடந்த ஆண்டு ரூ.722.76 கோடி மதிப்புள்ள துணிவகைகளை உற்பத்தி செய்துள்ளன. இதில் பருத்தி துணிகளின் உற்பத்தி மதிப்பு ரூ.601.57 கோடி மற்றும் பட்டுத் துணிகளின் உற்பத்தி மதிப்பு ரூ.121.19 கோடி ஆகும். மேலும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கடந்த வருடம் ரூ.869.59 கோடி மதிப்புள்ள துணிகளை விற்பனை செய்துள்ளன. இதில் ரூ.705.96 கோடி மதிப்புள்ள பருத்தி இரகங்களும் ரூ.163.63 கோடி மதிப்புள்ள பட்டு இரகங்களும் ஆகும். உள் நாட்டின் தேவைகளை ஈடு செய்வதற்கும் மேலாக நெசவாளர்கள் உற்பத்தி செய்கின்ற துணி இரகங்களை வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய தமிழக அரசு முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலுள்ள 377 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக படுக்கை விரிப்பு, மேசை விரிப்பு, திரைச் சீலைகள், டெர்ரி டவல்கள், தரை விரிப்புகள் போன்ற கைத்தறித் துணிகள் சுமார் ரூ.275 கோடிக்கு ஒவ்வொரு வருடமும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கைத்தறி துணிகளின் விற்பனையை அதிகரிக்க எடுக்கப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றாக மாநிலத்தில் பல்வேறு இடங்களில் கைத்தறித் துறை சார்பாக கைத்தறி கண்காட்சிகள் மற்றும் விற்பனை நடத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு நல்ல தரமான துணி வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் பட்டு மற்றும் பருத்தி நூல் புடவைகளை பொதுமக்களிடையே பிரபலப்படுத்தும் வகையில் சென்னை, மேற்கு மாம்பலம் ஆரிய கௌடா சாலையில் உள்ள ஸ்ரீ குமரன் அனுகிரஉறா கல்யாண மண்டபத்தில் கைத்தறி பட்டு மற்றும் நூல் புடவைகள் கண்காட்சி விற்பனை 5.7.2008 முதல் 7.7.2008 வரை காலை 10.00 மணியிலிருந்து மாலை 9.00 மணி வரை நடைபெறுகிறது.

இக்கண்காட்சியில் காஞ்சிபுரம், ஆரணி, சேலம்,, திருபுவனம், மன்னார்குடி, இராசிபுரம் மற்றும் மோட்சகுளம் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பட்டுச்சேலை இரகங்களும், உறையூர், ஜெயங்கொண்டம், வனவாசி, தோப்பூர், பரமக்குடி, கோவை மற்றும் சிறுமுகை பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி சேலைகளும், ஈரோடு பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மேஜை விரிப்புகள், திரைச்சீலைகள் மற்றும் படுக்கை விரிப்புகள் மற்றும் துணி இரகங்கள் விற்பனைக்கு உள்ளன. மேற்படி பகுதிகளைச் சார்ந்த 39 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இக்கண்காட்சியில் கலந்து கொண்டுள்ளன. இவைகளுடன் சென்னையிலுள்ள 3 லூம்வேர்ல்டு விற்பனை வளாகங்களும் SGSY யூனிட்டும், கோ–ஆப்டெக்ஸும் இக்கண்காட்சியில் பங்கு பெற்றுள்ளன. இக்கண்காட்சியில் ரூ.200/– முதல் ரூ.1800/– மதிப்புள்ள பருத்தி நூல் புடவைகளும், ரூ.1500/– முதல் ரூ.15000/– மதிப்புள்ள பட்டுப் புடவைகளும் விற்பனைக்கு உள்ளன.

இக்கண்காட்சியில் ரூ.82.50 இலட்சம் மதிப்புள்ள 1625 பட்டுப்புடவைகளும், ரூ.8.50 இலட்சம் மதிப்புள்ள 1505 பருத்தி நூல் புடவைகளும் ரூ.2.00 இலட்சம் மதிப்புள்ள வீட்டு உபயோக துணிவகைகளும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.95.00 இலட்சம் மதிப்புள்ள துணி வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்கண்காட்சியில் மேற்கொள்ளப்படும் சில குறிப்பிட்ட பட்டு இரகங்களுக்கு அதிகபட்சமாக 50% வரை சிறப்பு தள்ளுபடியும் இதர இரகங்களுக்கு 20% அரசு தள்ளுபடியும் வழங்கப்படும். இக்கண்காட்சியில் ரூ.20.00 இலட்சத்திற்கு விற்பனை எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் புது இரகத்தினை அறிமுகப்படுத்தும் விதமாக இவ்வருடமும் இக்கண்காட்சியில் காஞ்சிபுரத்தில் உள்ள காஞ்சிபுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் ( எண்.1464) திரு.சி.கோதண்டம் என்பவரால் உற்பத்தி செய்யப்பட்ட " புதிய அலைகள்" என பெயரிடப்பட்டுள்ள புதிய ரக பட்டு சேலை அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சேலையின் சிறப்பம்சம் யாதெனில், சாதாரண பட்டு சேலை நெசவில், கோர்வை ரக சேலை நெசவை பயன்படுத்தி, சேலையின் உடல் பாகத்தில் புகைப்பட நிழல் வடிவமைப்புடன் நெய்து (Shaded Effect) பட்டு இழையிலேயே சரிகை இழை பிரதிபலிப்பு (Pure Zari Effect) கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி சேலைக்கு வாடிக்கையாளர்களின் மத்தியில் நல்ல வரவேற்பு எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விலை ரூ.14,450/– ஆகும்.

இதுவரையில், வாடிக்கையாளர்கள் தாங்கள் வாங்கும் பட்டுப் புடவையில் உள்ள சரிகையின் உண்மையான தரத்தினை அறிந்து கொள்ள இயலாத நிலை இருந்ததை கருத்தில் கொண்டு அக்குறையை களைவதற்கு அரசு, எக்ஸ்ரே கதிவீச்சு பகுப்பாய்வு இயந்திரத்தினை ( XRF Analyser) காஞ்சிபுரம் சரிகை ஆலையின் மூலம் கொள்முதல் செய்து, காஞ்சிபுரம், சேலம் மற்றும் சென்னையில் நிறுவியுள்ளது. மேற்படி இயந்திரம் இக்கண்காட்சி விற்பனை வளாகத்தில் நிறுவப்பட்டு, வாடிக்கையாளர்கள் கொள்முதல் செய்யும்

பட்டுப்புடவைகளின் சரிகையின் தரத்தினை ரூ.10/- செலுத்தி தெரிந்து கொள்ளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் தேவையை கருதி, CREDIT CARD / DEBIT CARD பயன்படுத்தும் வசதியும் இக்கண்காட்சியில் செய்யப்பட்டுள்ளது.

**Wear your own design** என்கிற கருத்துடன், இக்கண்காட்சி அமைக்கப்பட உள்ளது. வாடிக்கையாளர்கள் விரும்பும் வடிவமைப்புகளில் புதியதாக புடவை நெய்து தருவதற்கான ஆர்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஆர்டர் சேலைகள், அவர்கள் விரும்பும் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ஒருமாத காலத்திற்குள் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு என்.கே.கே.பி.ராஜா அவர்கள் கண்காட்சியினைத் துவக்கி வைத்தார். வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமை வகித்தார். சென்னை, இன்போசிஸ் பிரின்சிபல் டைவர்சிட்டி அலுவலர் திருமதி ஸ்ரீமதி சிவசங்கர் அவர்கள் புதிய வடிவமைப்பினை அறிமுகப்படுத்தினார். கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் திரு விஷ்வநாத் ஷெகாவ்கர், இ.ஆ.ப., முதல் விற்பனையைத் துவக்கி வைத்தார். கோ-ஆப்டெக்ஸ் தனி அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப, முன்னிலை வகித்தார். மேலும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் திருமதி ஆர்.ஜெயா, இ.ஆ.ப. கூடுதல் இயக்குநர் திரு க.கர்ணன், இணை இயக்குநர் திரு எஸ்.நாகராஜ் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் தலைமை பொது மேலாளர், பொது மேலாளர்கள் மற்றும் துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9